பட்ட அதிகாரிகள் எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அங்கே அவரை இருக்கச் செய்து, விதிமுறைகளின்படி காரியங்களைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி தொழிற்சாலை விதிகளுக்கு முரண்பாடாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொழிற்சாலை ஆய்வாளர்கள் பலமுறை சென்று முறையாக ஆய்வு செய்யவில்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட புகார் ஏதாவது இருந்தால், அந்தப் புகார் பற்றி அரசுக்குத் தெரிவித்தால், அந்தக் குறிப்பிட்ட புகாரை ஒட்டி இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை அரசு அறியுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பெண்களை காலை 6—00 மணிக்கு முன்னாலும் மாலை 7—00 மணிக்குப் பின்னாலும் வேலையிலே அமர்த்தக் கூடாது என்பது விதி. அதனால் தொழிற்சாலைகள் சட்டம் 66 (1)ன் கீழ் அரசிடம் விதிவிலக்குப் பெற்று 7 மணி முதல் 10 மணி வரையில் பெண்களை வேலையில் அமர்த்தலாம். விதிவிலக்கு தரும்போது பெண்களுக்கு அங்கே பாதுகாப்பு இருக்கிறதா, அவர்களுக்கு போக்குவரத்து வசதி இருக்கிறதா என்பதைக் கருத்தில் கொண்டு அரசு விதிவிலக்கு வழங்குகிறது. இதற்கு முரண்பாடாக எங்காவது தொழிற்சாலைகள் நடவடிக்கை மேற் கொண்டிருந்தால் அந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலை பற்றி அரசுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்றுதல்

35—(*வினா எண் 70).—திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. வீ. தமிழ்மணி, திரு. என். பழனிவேல் மற்றும் திரு. வி. தம்புசாமி:

1989 ஏப்ரல் 5]

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்ற வேண்டும் என்னும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆதி திராவிடர்களுக்கு உறுதி செய்யப் பட்ட கான்கிரிட் கூரையுடன் வீடுகள் கட்டுவதென அரசு ஏற் கெனவே முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். (Hollow Block) என்ற உறுதி வாய்ந்த அந்தக் கற்களைக் கொண்டு வீடு களைக் கட்டினால் மிகவும் வலுவாக அமையும் என்று சொல்லப் படுகிறதே: எனவே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய தகவல் அரசி னிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழ கத்தின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் இப்போது பழுதடைந்திருக்கின்றன. அவைகளை மீண்டும் பழுதுபார்த்துத் தருவதோடு மட்டுமல்லாமல், இப்போது கட்டிக் கொண்டு வரு கின்ற ஓட்டு வீடுகள் மற்றும் பழுதடைந்த வீடுகளின் கூரைகளை மாற்றி கான்கிரீட் தளம் அமைத்துக் கொடுக்கப்படுமா என் பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர் களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் பெருமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில் ஒரு மாறுதல் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மக்களுக்கு ஊரை

விட்டு எங்கோ ஒரு இடத்தில் 50 வீடுகளோ அல்லது 25 வீடுகளோ கட்டி அவர்களைக் காலம், காலமாக ஒதுக்கப்பட்டவர்களாகவே வைக்கக் கூடிய முறையில்தான் நிலைமை இருப்பது போன்று நம் மனதில் ஏற்படுகிறது. ஆகவே, அந்த நிலைமையை மாற்றுவதற்கு ஏதாவது புதியதொரு வழியை இந்த அரசு கண்டு பிடிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அத்தோடு அவை சின்னச்சின்ன வீடுகளாக இருக்கின்றன. அங்கே போதிய வசதிகள் இல்லை. எனவே, நாம் வீட்டைக் கட்டிக் கொடுத்தாலும்கூட அதிலே நான்கைந்து குழந்தை குட்டிகளோடு வாழ்க்கை நடத்துவதற்கான வசதிகள் இல்லை. ஆகவே, அதை எல்லாம் பரிசிலித்து அந்த வீடுகளை நன்கு குடித்தனம் நடத்தக்கூடிய அமைப்புக்களாகக் கட்டிக் கொடுக்க அரசு முயற்சிக்குமா என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டிக் கொடுப்பது என்ற பெயரால் இருக்கின்ற குடியிருப்புக்களை அகற்றுகின்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே, அவரவர்கள் குடிசைகள் போட்டிருக்கின்ற இடத்திலேயே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அத்தோடு நகராட்சிகளில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும் இந்த வீட்டு உதவித் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, Everything is under consideration என்று சொல்கிறார். எனவே, அவர்களை Minister for Consideration என்று அழைக்கலாமா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பதில் இல்லை)

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்

குத் தீ பிடிக்காத இலவச வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திட்டத்தை முதன்முதலாக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் 1975ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்து, ஒரே ஆண்டிலே 87,000 வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். அப்படிக் கட்டிக் கொடுக்கிற நேரத்தில் செய்யாறு தொகுதியில்கூட பல ஆதி திராவிட காலனிகள் பயன் அடைந்தன. இன்றைக்கு அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றன. 13 ஆண்டுகளைக் கடந்துவிட்ட காரணத்தால் அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்து மழைக் காலங்களில் தண்ணீர் ஒழுகுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கலைஞர் அவர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட அந்த வீடுகளைச் சீர் செய்து, பழுது பார்க்க அரசினிடத்தில் குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, பழைய வீடுகளைப் புதுப்பிக்கிற அளவுக்கு நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால், அவர்களுடைய மேலான கருத்துக்களை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்காக வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும்கூட அவை பன்றிக் குடிசைகள் போல் சின்னச்சின்ன வீடுகளாகக் கட்டப்படுவதைப் பார்க்கிறோம். பன்றி அடைவது போன்ற வீடுகள் கட்டப்படுகின்றன. எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கிறோம். ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ, காமராஜர் வீடு கட்டும் திட்டம் போன்ற பல திட்டங்களின் மூலம் நாம் வீடுகளைக் கட்டி வருகிறோம். ஆனால், ஒரு ரூம் மட்டும் கட்டியிருக்கிறோம். அந்த ரூம் கட்டிவிட்டு அதோடு முடிந்துபோகிறது. தயவுசெய்து இதை இரண்டு ரூம்களாக மாற்றி ஒரு கிச்சன், ஒரு திண்ணை என்ற அளவுக்கு இருக்க வேண்டும். இதற்கான வீட்டினுடைய வடிவமைப்பை மாற்றிக் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தைக் கொஞ்சம் சேர்த்து பணம் அதிகமாக ஒதுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினாலே இவ்வாறான வீடுகள் கட்டப்படுகின்றன. மத்திய அரசு நிதிநிலைமையைப் பெருக்கிக் கொடுத்தால் இதற்குண்டானவற்றை ஆய்ந்து ஆவனசெய்து, நாம் அந்த வீடுகளை நல்ல முறையில் கட்டிக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.